திரு. கே. தவசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு நமது இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆண்டிப்பட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு தாலுகா அலுவலகம் ஏற்படுத்தினார்கள். அதேபோல் உரிமையியல் நீதிமன்றமும், குற்றவியல் நீதிமன்றமும் வேண்டுமென்ற அடிப்படையில் அங்கே இரண்டு நீதிமன்றங்கள் ஏற்படுத்த வேண்டிய சூழ்நிலையில் தற்போது உசிலம்பட்டியில் அந்த ஆண்டிப்பட்டி வழக்குகளை விசாரிக்கிற கோர்ட்டும் வாடகைக் கட்டிடத்தில் இயங்கிவருகிறது. எனவே அந்தக் கட்டிடத்தை ஆண்டிப்பட்டியில் மாற்றி அங்கே முதல் வகுப்பு நடுவர் நீதிமன்றம் அமைக்கப்படுமா என்பதை நான் அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டியில் 3 நீதிமன்றங்கள் இருக்கின்றன. அதில் ஒன்றை உத்தமபாளையத்திற்கு மாற்ற முடிவெடுக்கப்பட்டுள்ளது. உசிலம்பட்டியில் ஏராளமான வழக்குகள் இருக்கின்ற காரணத்தால், இரண்டு நீதிமன்றங்கள் அங்கே தேவைப்படுகின்றன. ஆனால் ஆண்டிப்பட்டியிலும் ஒரு நீதிமன்றம் தேவைப்படுகிறது. அதை முன்னிட்டு எங்களுடைய இனிய தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் உயர்நீதிமன்றத்திற்கு எழுதி இருக்கிறோம். அதைத் துரிதப்படுத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசும் முயன்று கொண்டிருக்கிறது.

திரு. கே. தவசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுகாவிற்கு ஒரு உரிமையியல் நீதிமன்றம் என்ற அடிப்படையில் ஆண்டிப்பட்டிக்கும் உரிமையியல் நீதிமன்றம் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகத் தெளிவாக என்னுடைய விடையிலே கருத்தைத் தெரிவித்து இருக்கிறேன். உயர்நீதிமன்றத்திற்கு வற்புறுத்திச் சொல்லி இருக்கிறோம். நிச்சயமாக விரைவில் ஆண்டிப்பட்டியில் ஒரு நீதிமன்றம் அமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 41. திரு. காஞ்சி பன்னீர்செல்வம். மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

41-- உத்திரமேரூரில் துணை நீதிமன்றம்.

*1757— திரு. காஞ்சி பன்னீர்செல்வம்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

உத்திரமேரூரில் துணை நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

1991 செப்டம்பர் 17]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 42. செல்வி ஜி. மல்லிகா. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

42—

புவனகிரியை தாலுகாவாக மாற்றுதல்.

*340—செல்வ ஜி. மல்லிகா:

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புவனகிரியை தாலுகாவாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தேவை எழவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

செல்வி ஜி. மல்லிகா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புவனகிரி தாலுகாவுக்கு மாற்ற இயலாவிட்டாலும் என்னுடைய தொகுதியிலுள்ள பரங்கிப்பேட்டையை நமது புரட்சித் தலைவியின் ஆட்சிக் காலத்தில் தாலுகா தலைமை யிடமாக மாற்றித் தர அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புவனகிரி என்றாலும் பரங்கிப் பேட்டை என்றாலும் இரண்டும் ஒரே வட்டத்தில்தான் வரு கின்றன. முதலில் சிதம்பரம் வட்டம், காட்டுமன்னார்கோயில் வட்டம் ஆகிய இரண்டும் சேர்ந்து ஒரே வட்டமாக இருந்தது. புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் காட்டுமன்னார் கோயில் வட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதாவது சிதம்பரம் வருவாய் வட்டம், காட்டுமன்னார்கோயில் வருவாய் வட்டம் என்று பிரிக்கப்பட்டிருக்கிறது. எனவே, இப்போது பிரிக்கப்பட வேண்டிய தேவையில்லை என்று அரசு கருதுகிறது.